DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S. 164/2024** |
| **Deposition of witness for** | : | **Defendant** |
| **Serial No. of Witness** | : | **DW1** |
| **Name** | : | சுப்ரமணியன் |
| **Father's Name** | : | கிட்டு |
| **Village** | : | வடக்கு கழுவூர் |
| **Taluk** | : | நான்குநேரி |
| **Age** | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 19.11.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். நான் 2 ம் பிரதிவாதிக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது.

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>

நான் என்னுடைய எத்தனையாவது குழந்தையை 1,2 வாதிகளுக்கு தத்து கொடுத்தேன் என்றால் 3 வது குழந்தையை தத்து கொடுத்தேன். மேற்படி 3 வது குழந்தையின் பெயர் என்னவென்றால் ஐஸ்வர்யா. எந்த வருடம் தத்து கொடுத்தேன் என்றால் 2019 ம் ஆண்டு. நானும் என் மனைவியும் சேர்ந்து தான் தத்து கொடுத்தோம் என்றால் சரிதான். குழந்தை தற்போது யாருடைய பராமரிப்பில் இருந்து வருகிறது என்றால் 1,2 வாதிகளின் பராமரிப்பில் இருந்து வருகிறது. 3 ம் வாதியான குழந்தை தற்போது படித்து வருகிறார் என்றால் சரிதான்.